# ★ ராணுவ செலவை குறைக்குமாறு கோரிக்கை!

விலை ரூபா 5-00


# ஈழநாடு

THE EELANACU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 10 இதழ் 312
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 25-12-1993


(கொழும்பு)

தொடரும் இராணுவச் செலவுகளை குறைக்குமாறு சர்வதேச அமைப்புகள் அரசை வற்புறுத்தி வருகின்றன.

பாதுகாப்புச் செலவின் அதிகரிப்பினால் இலங்கை அரசுக்கு நிதிப்பிரச்சினை ஏற்பட்டு (6-ம் பக்கம் பார்க்க)

## சிறந்த தலைமையில்லாமல் போரில் வெல்ல முடியாது

(கொழும்பு)

நல்ல அரசியல் தலைமைத்துவம் இல்லாமல் யுத்தத்தில் வெற்றிபெற முடியாது என்று தேசபிரேமி பிக்கு முன்னணியும், இன்னும் வழக்கறிஞர் உட்பட ஐந்து சங்கங்களும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-ம் பக்கம் பார்க்க)

## தொற்றுநோய் அபாயம் மருத்துவபிரிவு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

அண்மைய தொடர்மழை காரணமாக தமிழீழத்தின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக கழிவுநீர் கான், மலகூட கழிவுகள் முதலியவற்றுள் மூடி நீர் நிலைகள் மாசடைந்துள்ளன. இதனால் மனிதரிலிருந்து பரவும் நோய்களாகிய வயிற்றோட்டம், வாந்திபேதி, வயிற் (6-ம் பக்கம் பார்க்க)

## ● சிறிலங்காவின்

# ஆட்சியாளர் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணத் தவறிவிட்டனர்

## லங்காஹாடியன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்காவில் தொடர்ந்து வரும் ஆட்சியாளர்களோ எதிர்க்கட்சிகளோ தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணத் தவறியதன் மூலம் தமது பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறிவிட்டனர் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் 'லங்கா ஹ டியன்' ஆங்கில சஞ்சிகை குற்றம் சாட்டியுள்ளது'

லங்கா ஹாடியனில் ஜனத் ராஜபக்ஷ என்பவர் எழுதிய கட்டுரையொன்றிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983 ஜனவரியில் தமிழர்களுக்கெதிராக தாக்குதல் நடத்தியமையும் பின்பு 6-வது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் சிங்கள அரசியல் சட்டத்தைபலப்படுத்தியதும் அரசின் இதய சுத்தியுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க விரும்பாததையே காட்டுகிறது.

எதிர்க்கட்சிக்கும் அரசின் நடவடிக்கைகளை எதிர்ப்பதே அன்றி தகுந்த வழியை முன் (6ம் பக்கம் பார்க்க)

## மூவாயிரம் தொன் மா யாழ். வருகிறது!

(யாழ்ப்பாணம்)

மாகோ கப்பலில் பருத்தித்துறை துறைமுகத்துக்கு மூவாயிரம் தொன் மா எடுத்துவரப்படும் என்று யாழ் அரச அதிபர் திரு. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையிலிருந்து எடுத்துவரப்படும் இம்மா சில தினங்களில் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து (6ம் பக்கம் பார்க்க

## படகுசேவை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

கிளாலி பூநகர் படகுசேவை இன்றுமுதல் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தம் செய்யப்படவுள்ளதாக அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (பி)

## சமூகவிரோதி ஒருவருக்கு திருமலையில் மரணதண்டனை

(திருமலை)

திருமலையில் அட்டூழியங்கள் புரிந்து வந்த சமூகவிரோதி ஒருவருக்கு விடுதலைப்புலிகளினால் நேற்றுமுன்தினம் மரணதண்டனை வழங்கப்பட்டது.

பள்ளிக்குடியிருப்பு தம்பலகாமம் மூதூரைச் சேர்ந்த செல்வன் என அழைக்கப்படும் நாராயணன் செல்வன் என்பவருக்கே மரணதண்டனை வழங் (6ம் பக்கம் பார்க்க)

## சென்னை முகாமிலிருந்து இலங்கை போராளி தப்பியோட்டம்

(சென்னை)

சென்னையிலுள்ள அகதிமுகாம் ஒன்றிலிருந்து இலங்கைப் போராளி ஒருவர் தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ராசலிங்கம் என்ற போராளியே இவ்வாறு தப்பியோடியதாக தெரிவிக்கப்பட் (6ம் பக்கம் பார்க்க)

## இந்திய நிதி அமைச்சர் நேற்று ராஜினாமா

(புதுடில்லி)

இந்திய நிதிஅமைச்சர் மன்மோகன் சிங் நேற்று தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இந்திய லோகசபையில் பங்குச்சந்தை விவகாரம் குறித்தும், நிதி அமைச்சர் பற்றியும் விமர்சித்ததை அடுத்து அவர் இராஜினாமா செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படு (6ம் பக்கம் பார்க்க)

## புதியஅவசரகாலசட்டத்தினால் பத்திரிகைசுதந்திரம்பாதிப்பு

(கொழும்பு)

புதிய அவசரகால சட்ட மூலம் பத்திரிகைச் சுதந்திரம் ஒடுக்கப்படுவதற்கு. சுதந்திர தகவல் துறை சம்மேளனம் கண்டித்துள்ளனர்.

மத்திய மாகாண சபையில் இ. தொ. கா. உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டதும், அதை யொட்டி நடந்த தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஒடுக்குவதற்கு அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்ட அவசரகால சட்டவிதிகளையே சுதந்திரத் தகவல்துறை சம்மேளனம் மேற்கண்டவாறு கண்டித்துள்ளனர்.

இது ஒரு அசுரத்தனமான அவசரகால சட்டமாகும். தற்போது நாட்டில் நடைமுறைப்படுத்தப் படுவதற்கு என்ன அவசியம் இருக்கிறது என்று மேலும் கேள்வி எழுப்பி உள்ளது சுதந்திர தகவல் துறை சம்மேளனம்.

–ம-மி

## யாழ், மண்டைதீவில் ஷெல் தாக்குதல்! 4 வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு 10-45 மணியளவில் யாழ். நகரை நோக்கி ஏவிய ஷெல், 4ம் குறுக்குத் தெருவில் விழுந்து வெடித்ததில், இரு வீடுகள் சேதமடைந்தன.

மேற்படி ஷெல் க. பராசசேகரன், டாக்டர் ஸ்ரீஜீவகன் ஆகியோரின் வீடுகளில் விழுந்து வெடித்தது. இவ் வீடுகளில் இருந்தவர்கள் அருகிலிருந்த வீடொன்றுக்குச் சென்றிருந்தமையால் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்கள். (6ம் பக்கம் பார்க்க)

## மாகோ கப்பலில் விடைத்தாள்கள் கொழும்பு எடுத்து செல்லப்படும்!

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரப் பரீசை விடைத்தாள்கள் மாகோ கப்பலில் எடுத்துச் செல்லப்படுவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

தற்பொழுது பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் மாகோ கப்பல் இன்று அல்லது நாளை திருகோணமலை நோக்கிப் புறப்படவுள் (6-ம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட ஏழு உறுப்பினர்களையும் கட்சியிலிருந்து நீக்கமுடியாது

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமான், மத்திய மாகாணசபையில் இருந்து கடத்தப்பட்ட ஏழு இ. தொ. கா. உறுப்பினர்களை கட்சியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது ஒரு தலைப்பட்சமானதும் ஏற்றுக்கொள்ளமுடியாததுமான ஒரு முடிவு என்று இ. தொ. கா. வின் பொதுச்செயலர் எஸ், (6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டைப்புலம் சமத்தர் நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ். கி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (இ- 602)

### எஸ் லோன் பைப்புகள்

குழாய் கிணறுகளுக்கும், கைப்பம்புகளுக்கும் உரிய எஸ் லோன் பைப்புகள் விற்பனைக்கு உண்டு. நியூரோன் எலெக்ரிக்கல்ஸ் 141, 143, அரசசுணு வீதி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (எ-3671)

### கல்வி 94

O/L 94 ஆண்டு 4-ல் இருந்து 10 வரை கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் உயர்ந்த பெறுபேறடைய B. Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும் 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (இ-670)

### விற்பனைக்கு

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் ஆக்கிய மாணவர்களுக்கான மாண்புறு கதைகள்: விநியோகம்: நல்லூர் குருக்கதி எங்கும் கிடைக்கும். (இ-672)

### வியாழன், சனி மாற்ற பலாபலன்கள்

சதிராவின் 14-4-94 வரையுள்ள பலன்கள், மருந்துகள், பாடசாலை உபகரணங்கள் விற்பனையாகின்றன. பகவான் மருந்தகம் 221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இ-673)

### புலமைப்பரிசிலில் சாதனை

1993 புலமைப்பரிசில் பரீட்சையில் எமது நிறுவனத்தில் கல்வி கற்று அதிக கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். அவர்களுக்கான பரிசில் வழங்கல் வைபவம் நடைபெறவுள்ளதால் இதுவரை பதிவு செய்யாத மாணவர்கள் பெயர்களைப் பதிவு செய்யவும். 1994 ஆண்டு 5 வகுப்புகள் மாதாந்தப் பயிற்சிப் பாடங்களுடன் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இ-669)

### இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

சங்கீத வித்துவான் ஏ. கே. கருணாகரனின் கர்நாடக இசை அரங்கு இன்று பி. ப. 2-30 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (மீ)

---

அகில இலங்கை
இளங்கலைஞர் மன்றம்

## மாதாந்த இசை நிகழ்ச்சி

# "ஒளி விழா"

(பரமன் கிறீஸ்து பிறப்பு விழா)

இடம்: மன்றக் கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 26-12- 1993 ஞாயிறு மாலை 5 மணி

### நிகழ்ச்சி நிரல்

மாலை 5-00—6-00 1. மங்கள இசை வி. கே. கானமூர்த்தி வி. கே. பஞ்சமூர்த்தி குழுவினர்

மாலை 6-00—7-30 2. மங்கல விளக்கேற்றல்:-

1. சித்தவைத்தியர் எ. இராமசாமி அவர்கள்
2. அ. ஜேசுதாசன் (அருள்ஸ் தொழிலகம்) அவர்கள்

3 மௌன அஞ்சலி
4. வரவேற்புரை
5. வழிபாடு புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி யாழ்ப்பாணம்
6. தலைமையுரை: அருட்தந்தை லூயிஸ் பொன்னையா அ. ம. தி. (அமல உற்பவம், கொழும்புத்துறை)
7. அருளுரை: அருட்தந்தை செ. பிநேசரூபர் (பரியோவான் ஆலயம் கண்டுக்குழி)
8. பாடல்: சா. தேவமனோகரி ச. டிவியா, ச. புனிதவதி க. ஸ்லீசியா, ஜீ. சஜினி
9. வாழ்த்துரை: கவிஞர் சோ. பத்மநாதன் (உப அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)
10. பாடல்: த. சரவண, ஜே. ஸ்கொலஸ்டிக்கா வ. ஜோஷி டொறதி, மகிழினி விஜி
11. பிரதம விருந்தினர் உரை: அருட்தந்தை எஸ். எச். ஜெபநேசன் (இயக்குனர், மனித முன்னேற்ற நிலையம்)

7-30—8-15 ஆக்க நடனம்: 'தேவனின் பெருமை' (இராமநாதன் நுண்கலைக்கல்லூரி)

8-15—9-30 நாடகம்: 'சத்தியத்தின் தரிசனங்கள்' (தயாரிப்பு: திருமறைக்கலா மன்றம்)

விக்ரேஸ்/ நியூ விக்ரேஸ், விக்ரர் அன் சன்ஸ்
ஸ்தாபனங்களின் ஆதரவில்

கலா ரசிகர்கள் அனைவரையும் ஒளி விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

குறிப்பு: இளங்கலைஞர் மன்ற 14வது ஆண்டு இசைவிழா 6-2-94—20-2-94 வரை பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. இசைவிழாவில் கலந்து நிகழ்ச்சிகள் வழங்க விரும்பும் இளங்கலைஞர்களிடமிருந்து வாய்ப்பாட்டு வயலின் வீணை மிருதங்கம் புல்லாங்குழல் என்பவற்றில் தனி குழு நிகழ்ச்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்கள் தகுதியை உறுதி செய்து 10-01-94ம் திகதிக்கு முன்னர் தலைவர் இளங்கலைஞர் மன்றம் சட்டநாதர் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேற்படி
மன்றத்தினர்

20-12-93 (ஏ- 3683)

---

## விற்பனைக்குண்டு

நம்பகரமான அடை முட்டை வேண்டுமா?

அடை வைப்பதற்கேற்ற

ஃ வான் கோழி ஃ பென்டம்
ஃ பாமாஸ் ஃ சிவிக்கி
ஃ காப்பிலி ஃ தாரா

ஆகியவற்றின் முட்டைகள் விற்பனைக்குண்டு

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

முதன்மைச் செயலகம்,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
தாவடி.

(ஏ-3693)

---

யாழ் / வண்ணை

வைத்தீஸ்வரன் கோவில்

## திருவாசகப பெருவிழா

25 - 12 - 93 சனிக்கிழமை மாலை 5-00

தலைவர்: திரு. அ. பஞ்சலிங்கம் அவர்கள் (அதிபர், யாழ்/இந்துக்கல்லூரி)

மாலை 5-00 மணி — 7-00 மணி

மங்கள இசை

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. எஸ் சிதம்பரநாதன் | அளவையூர் |
| திரு. கே. கணேசன் | உதயசங்கர் |
| திரு கேதீஸ்வரன் | காரையம்பதி |
| திரு. நாகேந்திரா | கே. வீரச்சாமி |

மாலை 7-00 மணிக்கு

மங்கள விளக்கேற்றல்

திரு. கனகசபை தர்மகுலசிங்கம் அவர்கள் (சிவத்தொண்டர்)

மாலை 7-00 — 7-15 வரை

திருவாசகமோதல்

யாழ் / இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்கள்

மாலை 7-15 — 7-30 வரை

வரவேற்புரை

இரவு 7-30 — 7-45 வரை

தலைமையுரை

இரவு 7-45க்கு

சிறப்புச் சொற்பொழிவு

திரு. இ. ஜெயராஜ் அவர்கள்

அமைப்பாளர்

அ. இ. கம்பன் கழகம்

பாருள்

★ ஒரு வாசகம் ★

ஃ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தர்மகர்த்தா

வண்ணார்பண்ணை, 24 - 12 - 93. (ஏ-3694)

---

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

காரைநகர் மத்தி

அமரர் கந்தர் கிருஷ்ணர் அவர்கள்

சிவபூமியில் 1907-12-24
சிவபதப்பேறு 1993-11-25

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தீரே
நித்தமும் சிவாசிவன திருநீறணிந்தீரே
சிவனடியார் திருக்கூட்டம் சேர்ந்தீரே
சிவசிவவென்று திருக்கோவில் சூழ்ந்தீரே
திருமுறைகள் திருநாமம் ஓதியே
வாழ்வாங்கு வாழ்ந்த எம் பெரியாரே
நோய் நொடிகள் நொய்துடன் வாடாமல்
ஓர் நொடிக்குள் உலகை நீத்த உத்தமரே
தாயுமாய்த் தந்தையுமாய்த் தாரமுமாய்
அன்பும் ஆதரவும் அறிவும் தந்தெமை வளர்த்து
சிவனடியே தஞ்சமெனச் சேர்ந்தீர்
நினது திருவடி சரணம் அப்பா
உம்மை நாம் என்றும் மறவோம்
உங்கள் ஆத்மா சாந்திபெறத்
தமிழீழத்துச் சிதம்பரத்து ஈஸ்வரனை
இதயபூர்வமாகப் பிரார்த்திக்கின்றோம்.
ஈமக்கிரியைகளில் கலந்துதவிய அன்பர்களுக்கு எமது நன்றி

உங்கள் அன்பு மனைவி, மக்கள் மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
சகோதரர்கள், மற்றும் உறவினர்கள்.
கி. சிவமணி

மூளாய்
சுழிபுரம். இ-664

---

## வெற்றிடங்கள்

கிராம அபிவிருத்தித் திணைக்களம்
வடக்குக் கிழக்கு மாகாண சபை

**பதவி:**

1. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்
2. தையல் பயிற்சி போதனாசிரியர்

**விண்ணப்ப முடிவு திகதி:**

07-01-1994

மேலதிக விபரங்கள், மாதிரி விண்ணப்பப் படிவம் ஆகியவை பற்றிய விபரங்களை சகல பிரிவுச் செயலர் அலுவலகங்களிலும் (உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்), யாழ் செயலக கிராம அபிவிருத்திக் கிளையிலும் பார்வையிடலாம்.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபரும், மாவட்ட ஆணையாளரும்
யாழ். மாவட்டம்.

(ஏ-3689)

---

### ஆட்டுக்கடா திருட்டு

(நெல்லியடி)

வீட்டில் உள்ளோர் உறங்கிய சமயம் உட்புகுந்த திருடர்கள் சுமார் 1500 ரூபா பெறுமதியான ஆட்டுக்கடாவை திருடிச் சென்றனர். இத்துணிகர திருட்டுச் சம்பவம் அண்மையில் புலோலி வடகிழக்கு பல்லப்பை என்னுமிடத்தில் திரு. இராசையா வீட்டில் நிகழ்ந்துள்ளது. (160)

### வாழைக்குலை திருட்டு

(நெல்லியடி)

வீட்டிலுள்ளோர் நித்திரை செய்த சமயம் உட்புகுந்த திருடர் கோஷ்டி சுமார் நாநூறு ரூபா பெறுமதியான வாழைக்குலைகளை வெட்டிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு புலோலி வடகிழக்கு பல்லப்பை வைரவர் கோவிலடியில் நிகழ்ந்துள்ளது.

**மணிவாக்கு**

நிதானமான ஐயப்பாடு விவேகிகளின் ஒளிவிளக்கு எனப்படும்.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்

## நமது நோக்கு

### நத்தார் வாழ்த்து!

உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ மக்கள் மகிழ்ச்சியோடு நத்தாரைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அமைதியை அளிக்கவே இயேசு பெருமான் இவ்வுலகுக்கு வந்தார். ஆனால் வாழ்நாள் முழுவதுமே எதிர்ப்பையும் இன்னல்களையும் எதிர்நோக்க வேண்டியவரானார். இருந்தும் மனம் சலியாது அமைதிக்காகவே போராடினார்.

அன்புப் போதனையாலும், ஆத்ம ஞானத்தாலும் தம்மையே பரிதான மாக்கித் தர்மத்தை வளர்த்தார்.

கிறிஸ்து மனிதனாக வாழ்ந்தார்; மக்களுக்காகப் பாடுகளை அனுபவித்து சிலுவை மரணம் எய்தினார்.

உண்மைக்காகப் போராடும் மக்களுக்கு அவர் வாழ்வு நல்ல ஊக்கத்தை அளிக்க வல்லது; சேவை மனப்பான்மையை வளர்க்க உதவுவது.

அவர் வகுத்த வழி உலகின் பல கோடி மக்களுக்கு நல்வழியாக அமைந்துவிட்டது. அவரது போதனைகள் உலகத் துன்பங்களில் உழன்று கொண்டிருக்கும் பலருக்கு ஆறுதல் தருகின்றது.

அவரது வாழ்க்கையிலே நடந்த சம்பவங்களை மீட்டுப் பார்க்கும் போது, இயேசுபெருமான் ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கமே சார்ந்திருந்தார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெற்றெனத் தெரிகிறது.

ஆத்ம விடுதலைக்காக, உலக துன்பங்களிலிருந்து மீள்வதற்காகச் சமயங்கள் தோன்றின. ஆனால் இன்று நாம் காணும் காட்சி என்ன?

சமயங்களைப் பின்பற்றும் சில தீவிரவாதிகளால் மதப்பூசல்கள் தோன்றியுள்ளன. இது கவலைக்குரியதாகும்.

மதச் சடங்குகளுக்கு அப்பால் நின்று, சமரச சன்மார்க்க நோக்கில் பார்க்கும்போது இயேசுநாதரின் போதனைகள் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானவை.

இன்று, எமது பகுதியிலேயுள்ள மக்கள் படும் வேதனைகள் அளப்பரியன. கரையோரங்களிலே வாழ்பவர்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள் இராணுவ நடவடிக்கைகளால்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை செய்ய வந்த சில வேதனைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள். தேவாலயங்களும் குண்டுவீச்சினால் சேதமடைந்துள்ளன. நத்தார் வாழ்த்துக்கள்கூட உரிய தினத்தில் கிடைக்காதளவிற்குத் தபாற்கள் விநியோகம் இல்லை.

இயேசுபெருமான் கூறியதுபோல, அறியாமையால் செய்யும் துன்பங்களை மன்னித்து, புது வாழ்வு பெற்றிட நத்தார் உதவட்டும்!

## இன்று

(கொழும்புத்துறை)

யாழ். வண்ணார்பண்ணை சாயி பஜனை நிலையத்தில் இன்று 25ம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கும், நாளை 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கும் மக்களின் அமைதிக்காகவும், நாட்டின் சமாதானத்திற்காகவும் "அகண்டநாம" பஜனையும் நாமசங்கீர்த்தனமும் பகவான் அடியவர்களால் பஜனை ஆகி வேண்டிப் பிரார்த்திக்கவுள்ளனர். -154

0 0 0

(கொழும்புத்துறை)

மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூகநிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 25ம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நிலைய மண்டபத்தில் தலைவர் திரு. அ. துரைலிங்கம் தலைமையில் நடைபெறும். -154

0 0 0

(பருத்தித்துறை)

வியாபாரிமூலை ஸ்ரீசத்திய சாயிபாபா நிலையத்தின் கிறிஸ்மஸ்விழா நிலைய மண்டபத்தில் இன்று 25ம் திகதி நடைபெறுகின்றது. "இயேசு கிறீஸ்துவும் பகவான் பாபாவும்" பற்றி யாழ். கச்சேரி கணக்காளர் திரு. எஸ். சிவபாலனும், "உலகு எங்கும் ஒளி பரவட்டும்" பற்றி இலைப்பாறிய அதிபர் தோமஸ் செபமாலையும் "கிறிஸ்மஸ்விழா" பற்றி செல்வன் முருகமகிந்தனும் உரையாற்றுவார்கள். -52

## இராசிபலன்

25-12-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு மார்கழி 10)

அமாவாசி பி. இ. 2-48 வரை பரணி நண்பகல் 12 04 வரை ராகுகாலம் காலை 9-02 முதல் 10-54 வரை. சுபநேரம் மாலை 8-18 முதல் 4-12 வரை; சித்தாமிர்தயோகம்.

மேடம்- அதிகாரம், காரிய சித்தி, பிறர் பாராட்டு.

இடபம்- வேண்டா வெறுப்பு, பணமுடை, மனக்கவலை.

மிதுனம்- இனசன மகிழ்ச்சி, பிறர் நன்மை, தெய்வ தரிசனம்.

கடகம்- அமைதி காணல், கல்வி ஞானம், பணிவிடை.

சிம்மம்- ஆவேச உணர்வு, கடித தொல்லை, மனப்பயம்.

கன்னி- வீண் சச்சரவு, மனக்குழப்பம், குடும்ப பிரிவு.

துலாம்- உறவினர் ஒத்தாசை, சுபகாரிய செலவு, மனநிறைவு.

விருச்சிகம்- தாயன்பு, குடும்ப நன்மை, வெகுமதி.

தனுசு- மனவிரக்தி, சகோதர இனம், குடும்ப கவலை.

மகரம்- பணத் தாராறு, அலைச்சல், கடமை தவறுதல்;

கும்பம்- சுபகாரிய நிகழ்வு, தாமத வெற்றி, சாஸ்திர ஆராய்ச்சி.

மீனம்- விதண்டாவாதம், பழிச்சொல், மறதி.

—ஜோஸ்யன்.

# இலங்கையின் உற்பத்தியளவு வீழ்ச்சியடைந்து வருகிறது

(கொழும்பு)

இலங்கையின் உற்பத்தி அளவு வீழ்ச்சியடைந்து வருகின்றது என வியாபார முகாமைத்துவ தேசிய கல்லூரி இயக்குநர் மெக்ஸ்சபி பலெஸ் கூறியுள்ளார்.

முன்பு இந்தியா, பாகிஸ்தான் நாடுகளைவிட உற்பத்தித் துறையில் முன்னணியில் நின்ற இலங்கை இன்று சம நிலைக்கு இறங்கிவிட்டது.

இதே ரீதியில் போனால் இலங்கை இன்னும் மோசமான நிலைக்கு தள்ளப்படும் என்றும் யுத்தத்துக்கான செலவு அதிகரிப்பு இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றென அவர் மேலும் தெரிவித்தார்.

இத்தவேளை இந்த யுத்தத்தை நிறுத்துவதன்மூலமே இலங்கையின் சரிந்துவரும் மிக மோசமான பொருளாதார நிலையை நிமிர்த்த முடியும் என பல பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. -ம-

## காரைநகர் மணிவாசகர் சபையின் மணிவாசகர் விழாவும் பரிசளிப்பு வைபவமும்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபை நடாத்தும் மணிவாசகர் விழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 28ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சித்தன்கேணி சிவன்கோவில் மண்டபத்தில் சிறப்புற நடைபெற ஏற்பாடாகியுள்ளது!

பண்டிதர் சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திருவாசக பிரமுறை ஓதலும், ஆசியுரைகளும், சிறப்புச்சொற்பொழிவுகளும் மணிவாசகர் சபையினர் இம்முறை நடாத்திய சமய பாடப் பரீட்சைக்கான பரிசளிப்பு வைபவமும் இடம் பெறும்.

இப்பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்வையிட விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை தங்கள் தங்கள் பாடசாலைகளில் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. —கி

## வழிப்படுத்தும் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு வழிகாட்டல் பயிற்சி எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதியிலிருந்து

(5ம் பக்கம் பார்க்க)


தித்திக்கும் கிறிஸ்மஸ்- புத்தாண்டு

★ நல்வாழ்த்துக்கள் ★

★ உங்களுக்குத் தேவையான மூக்குக்கண்ணாடிகளை நியாய விலையில் குறிப்பிட்ட நேரத்தில் வழங்கும் ஸ்தாபனம் எரிக் கணேஸ்.

★ மூக்குக்கண்ணாடிகளின் முன்னோடிகள் எரிக் கணேஸ்.

விழி உங்களிடம்; அதன் ஒளி எங்களிடம்

எரிக் கணேஸ்

566. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் கிறிஸ்மஸ் - புத்தாண்டு

★ நல்வாழ்த்துக்கள் ★

"லிங்கம் வாசலிலே ஐஸ்கிறீம்தான் குடிப்பேன்... ஆஹா... என்ன சுவை... அச்சா... வாங்க டீ பேசலாம்..."

லிங்கம் கூல்பார்

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

கறுப்புக் கிறிஸ்மஸ்தான்
கடந்த காலங்களில்
நெருப்பு அணையாது
நீறு பூத்திருக்கின்றது
பொறுப்பாக பொருத்திய
தீபமே யேசுபாலா
திருப்பம் உண்டாக
திருவருள் தாராயோ.

சோபனம் நல்கும் நத்தார் வாழ்த்துக்கள்

ஜவுளிகளின் சாம்ராஜ்யம்

சீமாட்டி

122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்

இடிந்ததுயர் வாழ்வினிலே எம் கண்ணீர்ச் சோரியிலே
விடிந்த தொரு நாள் புதிதாய் விண்மீனில் ஒளி காண்போம்!!

அருந்துங்கள் அண்ணா கோப்பி

நறுமணமும் சுவை குன்றாத "அண்ணா கோப்பி" எங்கும் பெற்றுக்கொள்ளலாம்.

அண்ணா கோப்பி, இணுவில்.

கிளை: யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில்.

# நத்தார் சிறப்பு மலர்

ஆண்டாண்டு காலமாக மக்கள் இறைமகன் யேசு, எப்போது பிறப்பார்? எங்கே பிறப்பார்? என்று காத்திருந்தார்கள். அவர் ஆண்டுகளுக்கு முன் அன்பின் அவதாரமாக, அமைதியின் அண்ணலாக, மனித உருவிலே புனிதக் குழந்தை, விண்ணகம் விட்டு, மண்ணகம் வந்த மகத்துவம்மிக்க லுள்ள பெத்லகேம் என்ற ஊரிலே மனு உருவானார். இறை மகனாக வந்தவர் நிறை வசதிகளோடு குறைகள் எதுவுமின்றி குவலயம் தன்னில் குழந்தையாயிருக்க

## அமைதியின் அண்ணல்

களின் எதிர்பார்ப்பு ஆவல் அனைத்தும் நிறைவு கண்ட தினம்தான் அனைத்துலக மக்களும் இன்று கொண்டாடும் கிறிஸ்மஸ் விழா என அழைக் நன்னாள். இறைவன் அன்று ஆதிப்பெற்றோருக்கு அளித்த வாக்குறுதியின் நிறைவு நாள். மக்கள் பாவம் போக்க, மீட்பர் ஒருவர் பிறப்பார் என்ற லாம் ஆனால் இறை சித்தம் வேறு மாதிரியாக அமைந்திருந்தது. அவர் ஏந்தலாக வந்தவர் ஏழ்மைக் கோலமானார். மாநில மன்னனாக வந்தவர் மா தரித்திரக் கோலம் பூண்டார். இன்று எம்மக்கள் இவ்விடம் விட்டு இருப்பிடம் அற்று அகதிகளாக அலைவது போன்று அன்று அன்னை மரியாளும், சூசையப்பரும் ஒதுங்க இடமின்றி அகதிகள்போல் அலைந்தார்கள். இவர்களுக்கு இடம் அளிக்க, ஆதரவளிக்க அன்புக்கரம் நீட்ட அனைவரும் மறுத்துவிட்டார்கள். மக்கள் குறைபோக்க வந்தவருக்கு மக்கள் மத்தியில் பிறக்க இடமில்லை.



எப்படும் கிறிஸ்து பிறப்பு அந்த வாக்கு இன்று தான் விழாவாகும். முழுமை கண்டநாள் கிறீஸ்து இற்றைக்கு இரண்டாயிரம் மீட்பர் யூதேயா நாட்டி

**மோ. தார்சிசியஸ்**

அவர் பிறந்ததோ மாட மாளிகையில்ல மாட்டுக் கொட்டிலில். இதுதான் அவருக்குக் கிடைத்த இவ்விடம். மக்களுக்காய் வந்தவருக்கு, மக்கள் இடம் கொடுக்காததினால் மாக்கள் மத்தியில் மனிதனாக மனுவுருவானார்? வாய் பேசா மிருகங்கள் தான் அவர் துணையாகின. மார்கழி மதியில் மாபரன் யேசு, மார்குளிர் வேளை மாமரி மகனாய், மாநில மீதில், மானுடனானார். இறைவனின் சித்தம் இதுவாக அமைந்தது. இங்குதான் அமைதியின் அண்ணல் தோன்றினார். இங்கு தான் வார்த்தை மனுவுருக்கொண்டது இங்கு தான் மனித இரட்சணியம் தோன்றியது. இங்கு தான் இறைவாக்கு நிறைவாகியது.

தாழ்ச்சியைக் கற்பிக்க ஏழ்மையைச் சிறப்பிக்க, தனி

( ம் பக்கம் பார்க்க)

## வந்தனங்கள் சாற்றிடுவோம் வாரீர்

வெள்ளிமலை மீதில் மிருகமடை குகையில்
அல்லி நடுச்சாமத் தமலகண்ணி—புல்லணையில்
வந்த திருப்பாலனை யாம் சாஷ்டாங்கம் செய்து சுப
வந்தனங்கள் சாற்றிடுவோம் — வாரீர்.

— வி. பிரான்சிஸ்

## பாலகன் யேசு உதித்தார் தோழா!

ராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

மாதர்குல மணியாம் மரியன்னை மணிவயிற்றில்
பாலகன் யேசு உதித்தார — தோழா!
......... (மாத.........)

அனுபல்லவி

மாடுகள் உறைகின்ற இருள்நிறை தொழுவத்தில்
மார்கழி மாதத்தில் பெத்தல கேம்தன்னில்
......... (மாத.........)

சரணம்

பாதைகள் தடுமாறும் பாவிகள் கரைசேர்க்க
பாரங்கள் சுமந்துகளைப் இளைப்பவர் சுமைதீர்க்க
பார்வைகள் இழந்துள்ளம் சலிப்பவர் துயரோட
பாவங்கள் பொழிகின்ற துன்பங்கள் தனைப்போக்க
......... (மாத.........)

★

அன்புதான் உயர்வென்று அவனிக்குத் தெளிவூட்ட
அமைதிதான் சிறப்பென்று தரணிக்கு கொள்காட்ட
அறமொன்றே நிலையென்று அகிலத்துக் குணர்வூட்ட
அனைவரும் சமமென்னும் சமத்துவ நெறிகாட்ட
......... (மாத.........)

—"சரவணன்"

## துயர் சுமந்தார்

இறைமகன் யேசு அவதரித்தார்
இந்தப் பூமியில் நமக்காக
இருளைப் போக்கி ஒளியை
ஏற்றிடும் ஞான விளக்காக
கசையடி முடிமுள் சிலுவை சுமந்து
உதிரம் சொரிந்தார் எதற்காக
இறையின் அரசில் நிறைவாய் மக்கள்
வாழ்ந்திட என்றே அதற்காக!

பாவத்தின் சம்பளம் மரணமென்று
பரமபிதா சொன்னார்
தூயமனத்தவர் சாந்தம் நிறைந்தவர்
மாந்தரில் உயர்வென்றார்!
தேவனின் வழியில் மானிடப்பாவம்
களைந்திடத் துயர் சுமந்தார்
தீயவரால் மரித்தவர் உயிர்த்துத்
தந்தையைச் சென்றடைந் தார்!

—நெடுந்தீவு லக்ஷ்மன்

## வாழும் வாழ்வினில் உயர்நாள்

பாலன் பிறந்ததோர் நன்னாள் — இந்தப்
பாரில் உயர்ந்திடு திருநாள்
வாழும் வாழ்வினில் உயர்நாள் — இந்த
வையகம் மகிழ்வுறு திருநாள்
கூடிக்குலாவிப் பாடி மகிழ்ந்து — நல்ல
குடும்ப வாழ்வில் சிறப்புங் கண்டு
ஒடுக்கவிக்கும் இருவர் உளமும் — யாவருமும்
உவந்து யேசுவை நினைந்திடுந் திருநாள்.

— அரியாலையூர் கேந்திரன்


கண்ணில் தெரியும் ஒளிபோல, பாலன் யேசுவும் மக்களுக்காக
மக்களோடு அவதரித்தார், வாழ்த்தி வணங்குவோம் யேசுராசாவை
அனைவருக்கும் இனிய நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
காலத்துக்கு ஏற்ற கண்ணைக்கவரும் வேலைப்பாடுடன் கூடிய
தங்க வைர நகைகளை நிதான விலையில் பெற்றுக்கொள்ள
நேர்மையான ஸ்தாபனம்



# சோபனு நகை மாளிகை

116V, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.



பேசும் தெய்வம் யேசு பாசம் விதைத்து வந்தார், நாசம் பழிகள் நீங்க
வீசும் ஒளியாய் வந்தார்



அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்
கண்ணைக்கவரும் நகைகளை தமிழ்மக்களின்
விருப்பத்திற்கமைவாக நம்பிக்கையோடும்
நாணயத்தோடும் 22 கரட் தங்கத்தில்
வார்த்தெடுத்து தரும் ஒரே நகைவியாபாரிகள்

# நதியா நகை மாளிகை

02, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நதியா நகைமாளிகைக்கு அருகிலோ எங்குமோ கிளைகள் இல்லை

### அமைதியின்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திரத்தை உயிர்ப்பிக்க, இறு மையை இறப்பிக்க, வல்லப தேவனின் வார்த்தையை என் பிக்க தொடுறும் மக்களுக்கு, இன்னலுறும் மக்களுக்கு, வாழ்விழந்த மக்களுக்கு, வானகம் இழந்த மக்களுக்கு வாழ்வழிக்க இறைவன் தம் ஒரே பேறுன மகனை இந்தப் பேரகத்தில் நமக்களித்தார்.

அவர் நமக்குக் கொண்டு வந்த செய்தி "சமாதானம்" ஆகும். ஆம் அவர் பிறந்த போது வானவர் கூறிய செய்தி யாதெனில் "உன்னதங் களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக, உலகிலே அவர் தயவு பெற்றவர்களுக்கு அமைதி ஆகுக" என்பதே.

ஆம் அமைதியின் அண்ணலாக அவதரித்தவர் அன்றிருந்த அமைதி இழந்த மக்களுக்கு அமைதியைத் தேடி அலைந்த மக்களுக்குக் கொண்டு வந்தது அமைதி, சமாதானம் ஆகும். இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே வாழும் எமக்கும் அந்த அமைதியை நிறைவாக அளித்து, எமது இன்னல்கள் நீங்கி இன்புற்று வாழ அவரை இந்நாளிலே, இனிதே இறைஞ்சுவோம்.

### பாடசாலைக்கு கொட்டகை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் வை எம். சி. ஏ. நிறுவனத்தின் தற்காலிக மாக இயங்கி வரும் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயத்திற்கு உடுவில்-மானிப்பாய் வீதியிலுள்ள காணி ஒன்றில் கிடுகுக் கொட்டகை மண்டபம் ஒன்றை நிறுவிக் கொடுப்பதற்கு சண்டிலிப்பாய் பிரதேச கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை மேற் கொண்டுள்ளார். —62

### வழிப்படுத்தும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

13 ஆம் திகதிவரை இடம் பெறவுள்ளது. இவ்வழிகாட்டல் பயிற்சி இறுதியாண்டு கலை மாணவர்களுக்கும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. முதலாவது கலைத்தொகுதி மாணவர்ளின் இறுதியாண்டு இதுவாகும். (இ)

**வியாபாரம்பெருக**

**விளம்பரம் செய்க**


அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எங்கள் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

**முக்கிய அறிவித்தல்**

எம்மிடம் திருத்துவதற்கு தந்த றேடியோ, டெக், ரி. வி. ஸ்பீக்கர் ஆகிய பொருட்களை எமக்களின் பற்றுச் சீட்டைக் காட்டி இவ்வாண்டுக்குள் எடுத்துக் கொள்ளவும். இல்லையேல் இப்பொருட்களுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் இல்லை.

★ எங்களின் பற்றுச்சீட்டு முக்கியம்

**றேடியோமனுவல்**

121, ஸ்ரான்லி வீதி (அர்ச்சுனு வீதி)

யாழ்ப்பாணம்

(ஏ-3695)



யா/கந்தரோடை

தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

**நூற்றாண்டு விழாக் காலத்தில்...!**

5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் கூடிய புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெற்று சித்தியடைந்த எமது மாணவன்

**செல்வன் க. பிரகாஸ்**

மற்றும் பரீட்சையில் சித்தியடைந்த செல்வன் க. தெ. செந்தூரன், செல்வி பா. பிரசாந்தி, செல்வன் ப. மயூரன், செல்வி இ. சுபாஜினி, செல்வன் இ ராஜீவ் ஆகியோரையும்

ஆரம்ப வகுப்பு முதல் எமது வித்தியாசாலையில் கல்வி கற்று க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அதிவிசேட சித்தியைப் பெற்று வேறு பாடசாலைகளில் சேர்ந்து க. பொ. த. (உ. த.) பரீட்சை 1993ல் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட செல்வன் செ. சிவானந்தன் (A) செல்வன் சி. சாயீஸ்வரன் (3 A 1 B) செல்வன் து. சுதர்சன் (1 A 3 B) செல்வன் போ. நிர்மலன் (1 A 3 C) செல்வி போ. நிரஞ்சலா (2 B 2 C) செல்வி கு. நிரோஷினி (1 A 3 C) மற்றும் செல்வன் க. சதீஸ், செல்வன் பு. பத்மேந்திரா, செல்வி செ. பத்மானந்தி, செல்வி ச. துர்க்காதேவி, செல்வி க. சுபாஜினி ஆகியோரையும் —

வாழ்த்துகின்றோம்!

அதிபர், ஆசிரியர்கள்,

பழைய மாணவர் சங்கம்.

அபிவிருத்திச்சபை - சங்கம்.

யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை,

கந்தரோடை, 20-10-93. (எ-691)



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

இதயம் கனிந்த கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்

நவநாகரீக பட்டு, பருத்திப் புடவைகள் தெரிவிற்கு சிறந்தஸ்தாபனம்

**அஜந்தாஸ்**

54, பெரிய கடை

யாழ்ப்பாணம்



வானில் தெரியும் ஒளிபோல குழந்தை யேசுவின் பிறப்பு நல்லுலகிற்கு

கவலைகளை போக்கும் நல்லொளியாக மிளிரட்டும், நத்தார் வாழ்த்துக்கள்!

சகல மருந்து வகைகளுக்கும், கால்நடைகளுக்கான நோய் தடுப்பு மருந்து வகைகளுக்கும்

பிரசித்திபெற்ற நிறுவனம்

**பகவான் மருந்தகம்**

221, நாவலர் வீதி,

யாழ்ப்பாணம்.



அனைவருக்கும் மங்களம் பொங்கும் கிறிஸ்மஸ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

**மலரும் மலர்கள்**

82, சிவப்பிரகாசம் வீதி,

யாழ்ப்பாணம்.

(வீடியோ படப்பிடிப்பு சேவை)

BLOSSOMS





பாரும் உலகத்தைப் பாருமையா! கொடும்பாவ இருளைத் தீருமையா!!

வாரும் எமக்கருள் தாருமையா - என்றே வாழ்த்தி வணங்குவோம் ஏசுவையே

இதயம் கவரும் நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்!!

தங்கநகை உலகின் நம்பிக்கை நட்சத்திரம்

சிறிநதியா நகைமாளிகை. நித்தம் நித்தம் புதிய

டிசைன் நகைகளை அறிமுகப்படுத்தும் தங்கச்சுரங்கம்

**சிறிநதியா நகை மாளிகை**

இல. 02 G, ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்.

